செ.வெ.எண்: 628/2019 நாள்: 14.12.2019

# பத்திரிக்கை செய்தி

தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தின் அறிவிக்கையின்படி, திருவண்ணாமலை மாவட்டத்தில் ஊரக உள்ளாட்சி தேர்தலுக்காக வேட்புமனுக்கள் 09.12.2019 முதல் பெறப்பட்டு வருகிறது. உள்ளாட்சி தேர்தல் தொடர்பாக பொதுமக்கள் தங்கள் கோரிக்கை மற்றும் புகார் தெரிவிக்க ஏதுவாக உள்ளாட்சி தேர்தல்-2019 கட்டுப்பாட்டு அறை 13.12.2019 அன்று திறக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் ஊரக உள்ளாட்சி தேர்தல் தொடர்பான கோரிக்கை மற்றும் புகார் தொடர்பான விவரங்களை கட்டணமில்லா தொலைபேசி எண். 18004253678 மற்றும் தொலைபேசி எண். 04175 - 233141 என்ற எண்ணிற்கும் தொடர்பு கொண்டு தெரிவிக்குமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. க. சு. கந்தசாமி, இ.ஆ.ப. அவர்களால் கேட்டுக்கொள்ளப்படுகிறது. மேலும், அனைத்து ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த தேர்தல் நடத்தும் அலுவலர்களிடமும் ஊரக உள்ளாட்சித் தேர்தல் தொடர்பான கோரிக்கை மற்றும் புகார் தொடர்பான விவரங்களை தெரிவிக்குமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவண்ணாமலை மாவட்டம்.**